உ

"பிசகை எடுத்தும் கற்பன கல்"

# யா/வட்டு இந்துக் கல்லூரி, சித்தன்கேணி.

(நவோதய)

# J/VADDU HINDU COLLEGE (NAVODAYA)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு நாளும்

## FOUNDER'S DAY & PRIZE GIVING

## அதிபர் அறிக்கை

## *PRINCIPAL'S REPORT*

Chief Guest:

**Professor. M. SINNATHAMBY**

Faculty of Education, University of Jaffna

**MRS S. SINNATHAMBY**

Special Guest:

**MISS. S. SIVASAKTHYTHEVI**

(A.D.E. Valikamam Education Zone)

**MR. S. KANAPATHYPPILLAI**

(Former, A.D.E. MUSIC)

**MR. T. ENKARASU**

(Divisional Education Office, Chankanai)

**MR. P. SANMUGANANTHASIVAM**

(Retired. Engineer)

Founder's Day Address:

**SIVASRI. SABA. VASUDEVAKKURUKAL**

(Sivan Thevasthanam, Sithankerny)

Sithankerny.
20-10-2009

# நிகழ்ச்சி நிரல்

01. தாபகர் உருவச் சிலைக்கு மாலை அணிவித்தல்

02. மங்கல விளக்கேற்றல்

03. இறை வணக்கம்


04. வரவேற்பு நடனம்

05. வரவேற்புரை:- உப அதிபர்

வரவேற்புரை:- சிரேஷ்ட மாணவ முதல்வன்

06. அதிபர் அறிக்கை

07. தாபகர் தின உரை




08. சிறப்பு விருந்தினர் உரை

09. பிரதம விருந்தினர் உரை

10. பரிசில் வழங்கல்

11. நன்றியுரை

12. கல்லூரிக் கீதம்



# யா/வட்டு இந்துக் கல்லூரி (நவோதய)

# பரிசளிப்பு விழா - 2009

# அதிபர் அறிக்கை

இன்றைய தினம் எங்கள் கல்லூரியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்து முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவிற்கு ஒளியூட்டிச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் பெருமதிப்பிற்கும், அன்பிற்கும் உரிய கல்வியியற்றுறைப் பேராசிரியர். திரு. மா. சின்னத்தம்பி அவர்களே! அவர் தம் பாரியார் அவர்களே! இன்றைய இப்பரிசளிப்பு நன்நாளிலே ஆசியுரை நல்குவதற்காக இங்கு வருகை தந்திருக்கின்ற ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சு. கணபதிப்பிள்ளை அவர்களே!

சிறப்பு விருந்தினராக வருகை தந்து இன்றைய விழாவினை அலங்கரித்துக் கொண்டிருக்கும் வலிகாம வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் (முறைசாராக்கல்வி) செல்வி.ச.சிவசக்திதேவி அவர்களே! எங்கள் கல்லூரியின் நிறுவுநர் நினைவுப் பேருரையை ஆற்றுவதற்காக வருகை தந்திருக்கின்ற சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் அவர்களே!

கௌரவ விருந்தினராக வருகை தந்து இன்றைய விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் சங்கானைக் கல்விக்கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. துரை. எங்கரசு அவர்களே! ஓய்வுபெற்ற பொறியியலாளர் திரு.பொ.சண்முகானந்தசிவம் அவர்களே!

கல்லூரியின் வளர்ச்சிக்குப் பக்க பலமாக அமைந்து பல்வேறு வகைகளிலும், வழிகாட்டுகின்ற சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களே!

அயற்பாடசாலைகளின் அதிபர்களே! ஆசிரியர்களே! எங்கள் கல்லூரியின் ஆசிரியர்களே! கல்லூரியின் கல்விசாரா உத்தியோகஸ்தர்களே! அபிவிருத்தி சங்க உறுப்பினர்களே! பெற்றோர்களே! பெரியோர்களே! பழையமாணவர்களே! நலன்விரும்பிகளே! கல்லூரியின் மாணவச் செல்வங்களே!

உங்கள் அனைவருக்கும் இன்றைய காலைப்பொழுதில் எனது மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு அனைவரையும் வருக வருக என வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், கல்வியியற்துறைப் பேராசிரியராக விளங்கும் உயர்திரு மா. சின்னத்தம்பி அவர்களே! தாங்கள் இன்றைய விழாவில் முதன்மை விருந்தினராக வருகை தந்துள்ளமையையிட்டு மிகுந்த பேருவகை கொள்கின்றோம்.

தங்களின் அறிவுத்திறமையையும்,சேவையையும் பற்றி எவரும் அறியாமல் இருக்க முடியாது. தாங்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் உயர்கல்விப்பீடத்தில் கடமையாற்றி அதன்பின் எங்கள் கல்லூரியில் நியமனம் பெற்றுப் பணிபுரிந்த காலத்தை எம்மால் மறந்து விட முடியாது.அன்று முதல் இன்று . வரை கல்வித்துறைக்கு அரும்பணியாற்றிக் கொண்டு இருக்கின்ற, மணிவிழாவை அண்மையில் கண்ட, நாயகனை இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராக அழைக்க வேண்டுமென்ற ஆவல் எமக்கு எழுந்தது.அவ் ஆவலின் காரணமாகவே தங்களை இன்று இவ்விழாவிற்கு அழைத்துள்ளோம்.

உலகியல் மாற்றங்களுக்கும், செல்நெறிகளுக்கும் ஏற்ப தங்கள் செயற்பாடுகளை அமைத்துச் செயற்படுகின்ற தாங்கள் இன்று இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்துள்ளீர்கள். பல்வேறு நற்பண்புகளும் சேவையாற்றும் திறனும் மிக்க தங்களை இவ்வேளை வருக வருக என வரவேற்றுக் கொள்கின்றேன்.

ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.சு.கணபதிப்பிள்ளை அவர்களே! தாங்கள் இன்றைய் நாள் ஆசியுரை நல்குவதற்காக வருகை தந்துள்ளமையை இட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இறைபக்தியும் சிறந்த நற்பண்புகளும்மிக்க தங்கள் வருகை எம் யாவரையும் பேருவகையில் ஆழ்த்து கின்றது. தாங்கள் பிரதிக்கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய காலங்களில் தங்கள் சேவையையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் நெறிப்படுத்திய திறனையும் யாவரும் அறிவர். பல்வேறு சமயப்பணிகளையும் சமூகப்பணிகளையும்

மேற்கொண்டு வரும் தங்களை இன்று வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள உதவிக்கல்விப்பணிப்பாளர் செல்வி.ச.சிவசக்திதேவி அவர்களே! மாணவர்களின் கல்விவளர்ச்சிக்குத் தங்கள் பாடத்துறையில் ஆற்றும் பணியைப்பற்றி யாவரும் அறிவர்.தங்கள் இருகண்களாக மனைப்பொருளியல், ஆலோசகராகவும், உதவிக்கல்விப் பணிப்பாளராகவும் ஆற்றுகின்ற செயற்றிறன் எல்லோருக்கும் அமைந்து விடாது. தங்களை அர்ப்பணித்துச் செயலாற்றுகின்ற சேவைமனப்பாண்மை பற்றி நாமறிவோம். மனைப்பொருளியல் சம்பந்தப்பட்ட சகல போட்டிகளிலும் திறம்படவும், சிறப்பாகவும் அமைத்து ஆசிரியர்களையும் மாணவர்களையும் வழிப்படுத்துகின்றீர்கள். இவ்வாறான ஆற்றல் மிக்க தங்களை இன்றைய விழாவிற்குச்சிறப்பு விருந்தினராக அழைத்துள்ளமையில் பெருமகிழ்வு அடைந்து தங்களையும் வருக வருக என வரவேற்றுக்கொள்கின்றேன்.

உயர்திரு துரை எங்கரசு அவர்களே!தாங்கள் இவ்விழாவில் கௌரவ விருந்தினராக வருகை தந்துள்ளமையை இட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். தற்போது எங்கள் கோட்டக்கல்விப் பணிப்பாளராக விளங்கும் தாங்கள் எங்களுக்குப் புதியவர் அல்ல.தங்கள் செயலாற்றலை புதிதாக வந்த ஓர் சில நாட்களுக்குள்ளேயே தெரிந்துகொண்டோம். நீங்கள் எங்களுடன் நெருங்கிப் பழகுவதற்கும், கல்லூரியின் தேவைகளை அறிவதற்கும் வாய்ப்பு மிக அதிகமானது காரணம் எங்கள் கல்லூரியிலேயே கோட்டக்கல்வி அலுவலகம் அமைந்துள்ளமையே யாகும்.

மேலும் எங்களுக்கு எம் தேவைகளை அறிந்து உடனுக்குடன் நிறைவு செய்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கும் தங்களையும் வருக வருக என வரவேற்றுக் கொள்கின்றேன்.

திருவாளர்.பொ.சண்முகானந்தசிவம் அவர்களே! தாங்கள் இன்று கௌரவ விருந்தினராக வருகை தந்து விழாவைச் சிறப்பிப்பதையிட்டுப் பெருமகிழ்வு அடைகின்றேன். தாங்கள் பொறியியலாளராகப் பணியாற்றும் காலங்களில் ஆற்றிய சேவையை வட்டுக்கோட்டைக் கிராமமே அறியும்.பல்வேறு சமயப்பணிகளையும் சமூகப்பணிகளையும் ஆற்றும் தாங்கள் எங்கள் பாடசாலை நலன்களிலும் மிகுந்த

அக்கறை கொண்டவர் என்பது எமக்குத் தெரியும் தங்களையும் வருக வருக என வரவேற்றுக்கொள்கின்றேன்.

எங்கள் கல்லூரியின் நிறுவுநர் நினைவுப் பேருரையாற்றுவதற்காக இங்குவருகை தந்திருக்கும் சித்தன்கேணிசிவசிதம்பரேஸ்வர தேவஸ்தானக்குருக்கள் சிவஸ்ரீ. சபா. வாசுதேவக்குருக்கள் அவர்களே!

தங்களுடைய அறிவுத்திறனையும், புலமையையும் பற்றி யாமறிவோம். தாங்கள் கல்லூரிக்குப் பலமுறை வருகை தந்து வாழ்த்துரை வழங்கும் போது தங்களைக் கண்ணுற்ற நாம் இம்முறை ஸ்தாபகர் நினைவுப்பேருரையையாற்றத் தங்களை அழைக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது.அதன் காரணமாகவே தங்களை அழைத்துள்ளோம்.கல்லூரியின் பழைய மாணவராகிய தாங்கள் கல்லூரியில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் என்பதை யாம் மட்டுமல்ல வட்டுக்கோட்டைக் கிராமமே அறியும்.தகவல்களைப் பெறுகின்ற ஆற்றல்,திறமை மிக்க தாங்கள் கல்லூரி ஸ்தாபகர் அம்பலவாண நாவலர் பற்றி உரையாற்ற வந்துள்ளீர்கள்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலால்" என்ற குறளுக்கு இலக்கணமாக விளங்கும் தாங்கள் இன்று ஸ்தாபகர் உரையாற்ற வந்துள்ளமையையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் கல்லூரிச் சமூகத்தின் சார்பாகத் தங்களை வருக வருக என வரவேற்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

வலிகாமம் கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் திருவாளர்.ப.விக்னேஸ்வரன் அவர்களைஎங்கள் நினைவில் இருந்து நீக்கிவிட முடியாது.வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்பதற்கு முன்னரே எங்கள் கல்லூரியுடன் நெருங்கிப் பழகியவர். சங்கானைக் கல்விக்கோட்ட அதிகாரியாகவுள்ள போது அதிக அக்கறை காட்டியவர். அவர் எங்களுக்கு அதிகாரியாக மட்டுமன்றி வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் அமைந்து எம்மை அன்புடன் நெறிப்படுத்துபவர். வலிகாம வலயத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் வளங்களைக் கொடுத்துதவுபவர்.

இவ்வேளை எங்கள் வலயக் கல்விப்பணிப்பாளர் அவர்களையும் எண்ணி எம் உள்ளத்தில் பூரிப்படைந்து அவரையும் வரவேற்றுக்கொள்கின்றேன்.

அத்துடன் வலிகாம வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருவாளர். சு.சுந்தரசிவம் அவர்களையும் இவ்விடத்தில் நினைவுக்குக் கொண்டுவருகிறோம். மிகவும் கல்லூரியுடன் நெருங்கிப்பழகுபவர். கல்லூரியின் வளர்ச்சிக்கு மிகுந்த உறுதுணையாக உள்ளவர். நேரம் கிடைக்கின்ற போதெல்லாம் வருகை தருபவர். அவரையும் இத்தருணம் வரவேற்பதில் பெருமகிழ்வு எய்துகின்றேன்.

அத்துடன் இங்கு வருகை தந்துள்ள அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆசிரிய ஆலோசகர்கள், அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், கல்லூரி ஆசிரியர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள், மாணவச் செல்வங்கள், நலன்விரும்பிகள் மற்றும் இங்கு வருகை தந்துள்ள அனைவரையும் வருக வருக என வரவேற்றுக் கொள்கின்றேன்.

எங்கள் கல்லூரி 1894 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இன்று நூற்றாண்டு விழாவைக் கண்ட பாரம்பரியம் மிக்க ஓர் கல்லூரியாக விளங்குகின்றது. அன்று முதல் இன்று வரை எங்கள் கல்லூரியிலிருந்து தம்மை முழுமைப்படுத்திக் கொண்டு வெளியேறுகின்ற மாணவர்கள் பல்வேறு துறைகளிலே பிரகாசித்துக் கொண்டு நிற்கின்றார்கள்.இவற்றைப் பார்த்து எங்கள் கல்லூரித்தாய் உளப்பூரிப்பு அடைகின்றாள்.

கல்வியறிவு மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் கல்லூரி தற்போது முன்னணியில் நிற்கின்றது. தகவல் தொழில்நுட்பம் , சமூக விழுமியங்கள், கலைவெளிப்பாடுகள், பண்பாட்டியல் அம்சங்களெனப் பல் பரிமாண நிலையில் மாணவர்களை உருவாக்கும் எங்கள் கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்துள்ள அனைவரையும் மீண்டும் ஒருமுறை வருக வருகவென வரவேற்றுக் கொள்கின்றேன்.

இன்றைய பரிசளிப்பு விழா இரு நோக்கங்களைக் கொண்டது. ஒன்று கல்லூரியின் நிறுவுநர் தினத்தினை நினைவு கூர்வது மற்றையது 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாடசாலையில் நடைபெற்ற பரீட்சைப் பெறுபேறுகளையும், கோட்ட,வலய, மாவட்ட தேசிய மட்டங்களில் நடை பெற்ற சகல போட்டிகளிலும்

பங்குபற்றிச் சாதனைகளை நிலைநாட்டி தங்களுக்கும், கல்லூரித்தாய்க்கும் பெருமை சேர்த்த மாணவர்களைக் கௌரவப்படுத்தி மேலும் அவர்களை ஊக்கப்படுத்து முகமாக மேற்கொள்ளப்படும் பரிசளிப்பு நிகழ்வு இவ்விரண்டையும் இணைத்து மேற்கொள்ளப்படும் நிகழ்வாகவே இன்றைய இவ்விழா அமைகின்றது.

கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்களின் வழிகாட்டலிலும் இன்றைய உபஅதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களது அர்ப்பணிப்புள்ள தன்னலமற்ற சேவையும் பெற்றோர் பழைய மாணவர்களது ஒத்துழைப்பும் கல்வி நிர்வாக அதிகாரிகளது ஆலோசனைகள் வழிகாட்டுதல்கள் நெறிப்படுத்தல்கள் என்பனவும் சீராக இருப்பதனால் இக்கல்லூரி செவ்வனே சீராக இயங்கி வருகின்றது.

இன்று எங்கள் கல்லூரி 50 நிரந்தர ஆசிரியர்களுடன் 1045 மாணவர்களையும் கொண்டு இயங்கி வருகின்றது. அத்துடன் எங்கள் கல்லூரித்தாய் 2004 செப்ரெம்பர் ஆறாம் திகதி முதல் நவோதயாத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, சகல வளங்களும் கிடைக்கப்பெறுகின்ற தேசிய பாடசாலைகளுக்கு இணையாகவும் நிகராகவும் வளர்ந்து வருகின்றாள் என்பதை நான் இங்கு மிகப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன். மேலும் எங்கள் கல்லூரி அன்னை மேலும் பல்வேறு அணிகலன்களைப் பூண்டு, அழகு தந்து பல்லாண்டு காலம் சிறப்புற வாழவேண்டும். பல்வேறு ஆற்றல் மிக்கவர்களைப் பிரசவிக்க வேண்டும் என்பதே எனது ஆசையும் அவாவும் ஆகும். என் ஆவல் நிறைவேற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

## முகாமைத்துவமும் நிர்வாகச் செயற்பாடுகளும்

கல்லூரியின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள், இணைப்பாட விதானச் செயற்பாடுகள் என்பன சிறப்பாக அமையவும் மாணவர் ஒழுங்கு, கட்டுப்பாடு என்பன நன்கு கவனிக்கப்படவும் கல்லூரியின் நிர்வாகப் பிரிவுகள் நன்கு திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன. உப அதிபர், பகுதித் தலைவர்கள், பாட இணைப்பாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்களது முழுமையான ஒத்துழைப்பு என்பன கல்லூரி நிர்வாகத்தை இலகுவாக நடாத்த உதவுகின்றன. அத்துடன் அதிபரின் வேலைப்பழுவைக் குறைத்து கல்லூரிச் செயற்பாடுகள் யாவற்றையும் நிறைவுறச் செய்கின்றன.

கல்லூரியின் உப அதிபர் வே.குணபாலசிங்கம் அவர்கள் தனது கடமையைத் திறம்படச் செய்து வருகின்றார். கல்லூரியின் ஆரம்பப் பிரிவு திருமதி.க.மகிழ்ராஜன் தலைமையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. மேலும் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம், இந்து மாமன்றம் எனப் பல்வேறு வகை மன்றங்கள், அமைப்புக்கள் என்பன திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டு அவ்வவற்றிற்குப் பொறுப்பான ஆசிரியர்களினால் அவை வழி நடாத்தப்படுகின்றன. கல்லூரியின் முகாமைத்துவ நிர்வாகச் செயற்பாடுகளுக்கு கல்லூரி அலுவலகத்தில் கடமையாற்றும் எழுதுவினைஞர் திரு.இ.வசந்தன் மிகுந்த உறுதுணையாக இருக்கின்றார். இவரோடு திரு.தி.விக்னஜெயம் அவர்கள் தனது கடமை என்பதற்கு அப்பால் சேவை மனதுடன் கல்லூரி முகாமைத்துவ நிர்வாகச் செயற்பாடுகளுக்குப் பெரிதும் உதவி வருகின்றார்.

அத்துடன் ஆசிரியை திருமதி.செ.கிரிதரன்,திருமதி.ஆ.கேசவன்.ஆகியோரும் தமது வேலைக்கு அப்பால் அலுவலக வேலைகள் பலவற்றை ஆற்றுகின்றனர். கல்விசாரா உத்தியோகத்தர்களான திரு.ந.சிவபாலன், திரு.ட.அருள்பேட் ஆகியோரும் தங்கள் சேவையைத் திறம்பட ஆற்றுகின்றனர். அத்துடன் அலுவலக கணனி உதவியாளராகச் செல்வி.பா.துசிஜா எவ்வித பலனையும் எதிர்பாராது தன் சேவையைக் கல்லூரிக்கு நல்குகின்றார். பாடசாலைக் காவலாளி திரு.மு.கணபதிப்பிள்ளை அவர்களும் தன் சேவையைத் திறம்பட ஆற்றுகின்றார். கல்லூரியின் பகுதிநேரக் காவலாளியாகத் திரு.ம.விநோத் தன் சேவையை நல்குகின்றார். இவர்கள் அனைவரினதும் சேவையின் ஒட்டுமொத்த வெளிப்பாட்டாலே தான் கல்லூரி இன்று பொலிவு பெறுகின்றது.

## மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 – 5 | 57 | 49 | 106 |
| 6 – 11 | 264 | 226 | 490 |
| 12 – 13 | 205 | 242 | 447 |
| மொத்தம் | 526 | 242 | 1043 |

## க.பொ.த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறு – 2008

| | |
|---|---|
| பரீட்சைக்குத் தோற்றியோர் | 99 பேர் |
| உயர்தர வகுப்புக்குத் தகுதியானோர் | 45 பேர் |

### சிறந்த பெறுபேறு

| | |
|---|---|
| தவவடிவேல். தவரூபினி | 6A, 1B, 2C |
| நடராஜா. சுதர்சினி | 6A, 1B, 2C |
| இரத்தினசிங்கம். சங்கீதா | 5A, 1B, 3C |
| தனபாலசிங்கம். சிந்துஜா | 5A, 2B, 1S |
| கனகதம்பிராசா. சிவாஜினி | 5A, 1B, 2C, 1S |
| சபாரட்ணம். கணநாத் | 4A, 1B, 2C, 1S |
| சற்குணராசா. யேனுஷா | 4A, 2B, 2S |
| கிருஷ்ணகுமார். யாழினி | 4A, 2B, 2C, 1S |

## க.பொத.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு – 2008

| | |
|---|---|
| பல்கலைக்கழகத்திற்குத் தகுதியானோர் | 13 பேர் |
| கணிதப்பிரிவு | 03 |
| விஞ்ஞானப் பிரிவு | 05 |
| வர்த்தகப்பிரிவு | 04 |
| கலைப்பிரிவு | 61 |

### மிகச் சிறந்த பெறுபேறு

**கணிதப்பிரிவு**

யோகநாதன். பாஸ்கரன் — 2A, B

**விஞ்ஞானப் பிரிவு**

டயாநந்தன. சேனாதீரா — B, 2C

**வர்த்தகப்பிரிவு**

புகழேந்திரன்.சுதாஜினி 1A, 1B, 1C

**கலைப்பிரிவு**

சரவணபவாநந்தன.மதியழகி 3A

**பல்கலைக்கழக அநுமதி பெற்ற ஏனையவர்கள்**

| | | |
|---|---|---|
| தேவராசா. கென்ஸ்மன | (கலை) | 2A, B |
| பரமசிவம். தவப்பிரியன் | (கலை) | A, B |
| சதானந்தன். விஜிதா | (கலை) | A, 2B |
| செல்வரட்ணம். கிருஷ்ணகரன் | (கலை) | 2A,C |
| நேசரட்ணம். விஷ்ணுதாசன் | (விஞ்ஞானம்) | 2C,S |
| தர்மலிங்கம். நிசாலினி | (கணிதம்) | |
| S. கஜேந்தினி | (மனைப்பொருளியல்) | |

**தரம் 5 புலமை பரிசில்ப் பரீட்சை-2009**

இவ்வருடம் புலமைப்பரிசில்ப் பரீட்சைக்கு 23பேர் தோற்றியுள்ளனர். அவர்களுள் 100புள்ளிகளுக்கு மேல் 12பேர் பெற்றுள்ளனர். சி.கஜீபன் என்ற மாணவன்148 புள்ளிகளைப் பெற்று இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

க.பொ.த.சாதாரணதரம், க.பொ.த.உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கும், கல்வியியல் கல்லூரிகளுக்கும், தாதியர் பயிற்சி நெறிக்கும் தெரிவான மாணவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களின் வெற்றிக்கு வழிகாட்டிகளாகத் திகழ்ந்த ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

**நூலகம்**

எங்கள் கல்லூரியின் நூலகம் ஆசிரியை செல்வி. ந. நளாயினி அவர்களின் உதவியுடன் ஒழுங்காகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.பாடங்கள் சார் நூல்கள், மாணவர்களின் அறிவுத்தேடல்களுக்கு ஏற்ற இலக்கியங்கள்,

சிறுவர்களுக்கான நூல்கள்,தொழிநுட்பம் சார் வெளியீடுகள்,எனக் கல்லூரி மாணவர்களின் அறிவியல் தேடல்களை ஓரளவு நிறைவு செய்வதாக இது காணப்படுகின்றது.

## மாணவர் ஒழுக்காற்றுக்குழு

கல்லூரியின் ஒழுக்கம்,கட்டுப்பாடு என்பனவற்றிற்கும் பாடசாலையின் நற்பெயரையும், இலட்சியத்தையும் ,உள்ளேயும், வெளியேயும் மாணவர்கள் கடைப்பிடிப்பதற்கும், ஆசிரியர்கள் இணைந்து செயற்படுகின்றனர்.இக்குழுவிற்குப் பொறுப்பானவர்களும் ஏனைய ஆசிரியர்களும் மாணவத்தலைவர்களும், வகுப்பு மாணவ முதல்வர்களும் சிறப்பான முறையில் செயற்படுகின்றார்கள்.அவர்களின் செயற்பாடுகள் மேலும் சிறப்பாக அமைய வேண்டுவதோடு அவர்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## மாணவமுதல்வர் குழு

கல்லூரியின் ஒழுங்கிற்கும், அமைதிக்கும் உதவும் வகையில் மாணவ முதல்வர் குழு செயற்பட்டு வருகின்றது. 40 அங்கத்தவர்களைக்கொண்ட இக்குழு சிறப்புடன் செயலாற்றுகின்றது. இவர்களது நியமனம் செயற்பாடுகளுக்கும், மாணவர் ஒழுங்கு கட்டுப்பாடுகளுக்கும், பொறுப்பாக ஆசிரியர் திரு.வே.குணபாலசிங்கம், திரு. ஆ. சி. பாலகிருஷ்ணன்,திருமதி.கி.ஜெயானந்தம்,திருமதி.த.சிவானந்தம்,திருமதி.ச.பாலசுந்தரம், திருமதி.ல.கி.விக்டர்.ஜெயக்குமார்,திரு.சி.தனஞ்சயன்,திருமதி.ப.கைலாசநாதன்,திரு.யூட். கருணாகரன், திரு.ம.தவரூபன் ஆகியோர் செயற்படுகின்றனர்.

## ஆசிரியர் ஒன்றியம்

கல்லூரி ஆசிரியர் ஒன்றியத்தின் தலைவராக திரு.பொ.ஆரூரன் அவர்கள் செயற்படுகின்றார்.செயலாளராகத் திருமதி.வி. தெவமலர் அவர்களும், பொருளாளராக திருமதி.சு.தயாகசீலன் அவர்களும் கடமையாற்றுகின்றார்கள். அவர்களுக்கு ஏனைய ஆசிரியர்கள் ஒத்துழைப்பை நல்குகின்றார்கள். இவ் ஒன்றியம் கல்லூரிச் செயற்பாடுகளுக்கு நிதியை வழங்குவதுடன் இடமாற்றம், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான பிரிவுபசார வைபவங்களையும் ஒழுங்கு செய்து நடாத்து கின்றது. ஆசிரியர்களின் இல்லங்களில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு இவ் ஒன்றியம் கூட்டாகச்சென்று கலந்து கொள்கின்றது.

ஆசிரியர் தொடர்பான சகல விடயங்களிலும் இவ் ஒன்றியம் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது.அங்கு கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதியைக் கல்லூரித் தேவைகள் சிலவற்றிற்கு வழங்கி வருகின்றது.

## விளையாட்டு

எங்கள் கல்லூரியைப் பொறுத்தவரை விளையாட்டுத்துறை பல்வேறு வகைகளிலும் வளர்ச்சியடைந்து வருகின்றமை மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.சீரான போதியளவு மைதான வசதி எமக்கு இல்லை என்றாலும் கோட்ட,வலய, மாவட்ட, மாகாணமட்ட, மெய்வல்லுனர் போட்டிகளிலும், உடற்பயிற்சிப் போட்டிகளிலும் மாணவர்கள் வெற்றியீட்டி வருகின்றனர். அவர்களிற்கு எனது பாராட்டுக்கள். மாணவர்கள் விளையாட்டுப்போட்டிகளில்வெற்றி பெறுவதற்குப் பயிற்சியளித்த ஆசிரியர்களுக்கும், விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பான ஆசிரியை திருமதி.வி.பாஸ்கரன் அவர்களுக்கும், விளையாட்டுத்துறைக் குழுவினர்களுக்கும், ஏனைய ஒத்துழைப்பு நல்கும் ஆசிரியர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.குறிப்பாக கல்லூரியின் உபஅதிபர் திரு.வே.குணபாலசிங்கம் அவர்கள் கோட்டமட்ட, வலயமட்ட போட்டிகளுக்கான பயிற்சிகளை அளிப்பதில் உடற்பயிற்சி ஆசிரியருக்கு உதவியாக உள்ளார்.அவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## மன்றங்கள்

கல்லூரியில் பல்வேறு துறைசார்ந்த மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன.உயர்தர மாணவர் மன்றம் மிகச்சிறப்பாக இயங்கி வருகின்றது.வருடம் தோறும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து ஆசிரியர் தினவிழாவைச் சிறப்புற நடத்துகின்றது.இதேபோன்று இந்துமாமன்றமும் சிறப்புடன் செயற்பட்டு வருகின்றது.நவராத்திரி விழா உட்படப் பல விழாக்கள், குருபூசைகள் போன்றவற்றை மிகச்சிறப்புடன் கொண்டாடுகின்றது.இவ்விடத்தில் இம்மன்றங்களுக்குப் பொறுப்பாக இருந்து வழிநடத்தும் ஆசிரியர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவற்றுடன் தமிழ்மன்றம், கணிதவிஞ்ஞான மன்றம்,ஆங்கில மன்றம், சமூகவியல் மன்றம்,வணிக மன்றம் ,விவசாய மன்றம்,மனைப்பொருளியல் மன்றம்,நுண்கலை மன்றம் போன்ற மன்றங்களும் அவ் அவற்றுக்குப் பொறுப்பான ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் சிறப்புற இயங்கி வருகின்றது.

## சாரணீயச்செயற்பாடு

சாரணீயச் செயற்பாடானது மாவட்ட மாகாணமட்டத்தில் சிறப்பாக இயங்குகின்றது. குருளைச்சாரணீயம் மாவட்டமட்டத்தில் பாட்டு 2ஆம் இடமும் நடனம் 1ஆம் இடமும் விளையாட்டு 2ஆம் இடமும் அணிநடை 3ஆம் இடமும் கைவேலை 1ஆம் இடமும் பெற்று மாகாணத்திற்கு தெரிவாகியது. பேடன் பவல் தினத்தில் கை.சுரென் பேச்சுப்போட்டியில் 3ஆம் இடத்தை பெற்றுக்கொண்டார். சாரணர் மாவட்ட மட்டப் போட்டியில் நிலைக்காட்சி 2ஆம் இடமும் தீப்பாசறை நிகழ்வு 1ஆம் இடமும் மைதானக்காட்சி 1ஆம் இடத்தையும் தனதாக்கி மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடத்தை பெற்றுக்கொண்டதோடு மகாணமட்டத்திற்குத் தெரிவாகியது. இவ்வெற்றிக்குச் சாரணர்கள் சார்பில் தாரகன், வேல்மகிபன், வசீகரன், ஜனார்த்தனன் ஆகியோர் போற்றப்பட வேண்டியவர்கள். அத்தோடு உபஅதிபர் திரு.வே.குணபாலசிங்கம் அவர்கள் சாரணீயச் செயற்பாட்டிற்கு பெரிதும் உறுதுணையாக உள்ளார்.

குருளைச் சாரணர் நிகழ்வுகளுக்கு திருமதி.தயாளினி, திருமதி.சிவபாலன், திருமதி.க.மகிழ்ராஜன் போட்டிகளுக்கு மாணவர்களை அழைத்துச்செல்வதற்கு உதவி செய்ததோடு பக்கபலமாய் இருந்துசெயற்படுகின்றனர்.

குருளைச் சாரணீயத்திற்குப் பொறுப்பாகஇருக்கும் திருமதி.ப.கைலாசநாதன் இம்முறை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் விசேட விருதினைப் பெற்றுக்கொண்டதோடு அகில இலங்கை ரீதியாக, நடைபெற்ற உதவி பயிற்றுனர் தலைவர் பயிற்சிக்கு துல்கிரியாவிற்குச் சென்று விசேட பயிற்சியையும் பெற்றுக்கொண்டார்.

பெண்சாரணிய செயற்பாடானது பாடசாலையில் சிறப்பாக இயங்கி வருகிறது. பெண்சாரணீயத்திற்குப் பொறுப்பாக செல்வி.க.வத்சலா அவர்கள் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார். பெண்சாரணிகள் Baden Powels சிந்தனை நாள் (Thinking Day),சாரணீயப்பாசறை நிகழ்வுகளில் பாடசாலை ரீதியாகவும், மாவட்ட, மாகாண ரீதியாகவும் ஆர்வத்துடனும், சிறப்பாகவும் செயற்பட்டு வருகின்றது.

அத்துடன் ஆரம்பபாடசாலையில் பெண்பிள்ளைகள் சிறு தோழர்களாக(Little Friends) இணைந்து செயற்படுகிறார்கள். இதற்கு பொறுப்பாக திருமதி. பகீரதன் இருந்து வருகின்றார்.

உ



**வருடா வருடம் நிதி வழங்கும் கொடையாளன்**

hepdesk@schoolnet.lk

# ENGLISH DAY COMPETITION 2009

## Divisional Level Results

| Grade | Event | Name | Place |
|---|---|---|---|
| 05 | Copy writing | S.Thabothini | Third |
| 08 | Copy writing | M.Vivitharani | Second |
| 09 | Copy writing | L.Dilani | Second |
| 12 | Copy writing | T.Sinthuja | Third |
| ·10 | Creative writing | A.Jamuna | First |
| 07 | Dictation | P.Risykanthy | First |
| 10 | Dictation | A.Jamuna | Third |
| 13 | Oratory | S.Karthika | Third |
| Grade | Event | Name | Place |
| 05 | Copy writing | S.Thabothini | Third |
| 08 | Copy writing | M.Vivitharani | Second |
| 09 | Copy writing | L.Dilani | Second |
| 12 | Copy writing | T.Sinthuja | Third |
| 10 | Creative writing | A.Jamuna | First |
| 07 | Dictation | P.Risykanthy | First |
| 10 | Dictation | A.Jamuna | Third |
| 13 | Oratory | S.Karthika | Third |

## Junior Drama 3rd Place

| Grade | Name |
|---|---|
| 09 | S. Thamilini |
| 09 | J. Shajini |
| 09 | L. Dilani |
| 09 | S. Anusha |
| 08 | R. Thamilini |
| 08 | M. Vivitharani |
| 08 | T. Vanaja |
| 08 | T. Inthuja |
| 08 | V. Vinuka |
| 07 | K. Bavatharani |

## Zonal level Results

| Grade | Event | Name | Place |
|---|---|---|---|
| 07 | Dictation | P.Risykanthy | Third |

## தமிழ்மொழித்தினப்போட்டி முடிவுகள் 2009

| பெயர் | பிரிவு | நிகழ்ச்சி | கோட்டமட்டம் |
|---|---|---|---|
| மோ. மைதிலி | 5 | தமிழியற் கட்டுரை | 2ம் இடம் |
| நா. தனுசா | 5 | கவிதையாக்கம் | 1ம் இடம் |
| ஏ. சயந்தினி | 5 | பாவோதல் | 2ம் இடம் |
| ச. யேனுஷா | 5 | பேச்சு | 1ம் இடம் |
| ம. சுகந்தன் | 1 | பேச்சு | 2ம் இடம் |
| கை. பவதாரணி | 2 | தனிநடனம் | 2ம் இடம் |

- நாட்டார் பாடல் திறந்தபோட்டி கோட்டமட்டம் 1ம் இடம், வலயமட்டம் 2ம் இடம்
- நாட்டிய நாடகம் கோட்ட மட்டம் 2ம் இடம்.
- குழு நடனம் பிரிவு 3 கோட்டமட்டம் 1ம் இடம்
- குழு இசை I கோட்ட மட்டம் 2ம் இடம்.
- குழு இசை II கோட்ட மட்டம் 3ம் இடம்.
- இலக்கியநாடகம் கோட்ட மட்டம் 3ம் இடம்.
- வில்லுப்பாட்டு கோட்ட மட்டம் 2ம் இடம்.
- கட்டுரை வரைதல் பிரிவு1 1ம் இடம.

## விளையாட்டுப்போட்டி முடிவுகள் 2009(கோட்டமட்டம்)ஆண்கள்

| வயது | பெயர் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|---|
| 08 | சி. சதிர்சன் | குறிபார்த்து எறிதல் | 3 |
| 10 | சி. கம்சனன் | குறிபார்த்து எறிதல் | 2 |
| 11 | நி. சிந்துஜன் | 75m | 1 |
| 11 | நி. சிந்துஜன | உயரம் | 1 |
| 11 | நி. சிந்துஜன் | 100m | 1 |
| 15 | சி. பாஸ்கரன் | 400m | 1 |
| 15 | இ. யேசிதன் | தட்டு | 3 |
| 15 | சி. சிபாஸ்கரன் | 200m | 3 |
| 17 | வே. ரோஷாந் | உயரம் | 2 |
| 17 | சி. கோகிலேஸ்வரன் | 800m | 2 |
| 17 | அ. றமேஸ்குமார் | தடியூண்டிப்பாய்தல் | 2 |
| 19 | ஜெ. சுபாஸ்கரன் | 200m | 3 |
| 19 | த. தனுராஜ் | 200m | 3 |
| 19 | ஜெ. சுபாஸ்கரன் | 400m | 2 |
| 19 | வை. ஜெயக்குமார் | 800m | 3 |
| 19 | தி. கிருஷாந்தன் | 5000m | 1 |
| 19 | ந. சுதர்ஜன் | உயரம் | 2 |
| 19 | ப .ரவீந்திரராசா | ஈட்டி | 2 |
| 19 | ச. கோபிநாத் | 110m சட்டவேலி | 2 |

| | | | |
|---|---|---|---|
| 19 | வை. ஜெயக்குமார் | தடியூண்டிப்பாய்தல் | 2 |
| 21 | ஜோ. ஸ்ரீராமநாத் | 100m | 1 |
| 21 | ஜெ. கஜக்கிரீவன் | 200m | 3 |
| 21 | மி. குஜன் | 800m | 1 |
| 21 | க. பஜிதரன் | 1500m | 3 |
| 21 | ஜெ. கஜக்கிரீவன | 110 m தடை | 1 |
| 21 | ஜோ. ஸ்ரீராமநாத் | 400 m தடை | 1 |
| 21 | ஜோ .ஸ்ரீராமநாத் | நீளம் | 2 |
| 21 | மி. குஜன் | ஈட்டி | 1 |

## விளையாட்டுப்போட்டி முடிவுகள்
## 2009(கோட்டமட்டம்)பெண்கள்

| வயது | பெயர் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|---|
| 08 | தி. பவிதா | முழங்கால் பிரட்டி பந்து எறிதல் | 3 |
| 10 | சி. துலக்சியா | நின்று நீளம் பாய்தல் | 2 |
| 13 | ம. அனுசியா | 100m | 2 |
| 13 | ம. அனுசியா | 200 m | 3 |
| 15 | செ. சுஜிதா | தட்டு | 1 |
| 17 | க. அபிவர்சினி | 100 m | 2 |
| 17 | ஜெ. பிரசன்ஜா | தட்டு | 3 |
| 17 | த. தனலச்சுமி | 100 m தடை | 3 |
| 19 | க. ஜான்சி | 100 m | 1 |
| 19 | சி. டிலானி | 200 m | 3 |
| 19 | சி. டிலானி | 800 m | 2 |
| 19 | மா. திவ்யா | 3000 m | 1 |
| 19 | ம. கினோபா | ஈட்டி | 2 |
| 19 | க. ஜான்சி | நீளம் | 2 |
| 19 | க. ஜான்சி | 100 தடை | 2 |
| 21 | நா. பிரதீபா | 100 m | 3 |
| 21 | நா பிரதீபா | 200 m | 3 |
| 21 | சி. சிவரூபி | 800 m | 3 |
| 21 | ச. கோமதி | 1500 m | 1 |
| 21 | ச. கோமதி | 3000 m | 1 |
| 21 | நா. பிரதீபா | 100m தடை | 3 |
| 21 | ச. கோமதி | நீளம் | 3 |
| | | | |

19 வயதின் கீழ் ஆண் 4 x100 அஞ்சல் கோட்டமட்டம் -1ம் இடம்

21 வயதின் கீழ் ஆண் 4x100 அஞ்சல் கோட்டமட்டம் -3ம் இடம்

19 வயதின் கீழ் பெண் 4x100 அஞ்சல் கோட்டமட்டம் -1ம் இடம்

19 வயதின் கீழ் ஆண் துடுப்பாட்டம் கோட்டமட்டம் -3ம் இடம்

19 வயதின் கீழ் பெண் வலைப்பந்து கோட்டமட்டம் -3ம் இடம்

19 வயதின் கீழ் பெண் கரப்பந்து கோட்டமட்டம் -2ம் இடம்

17 வயதின் கீழ் பெண் கரப்பந்து கோட்டமட்டம் -2ம் இடம்

17 வயதின் கீழ் ஆண் கரப்பந்து கோட்டமட்டம் -3ம் இடம்

11 வயதின் கீழ் ஆண் கோட்டமட்ட முதன்மைவீரர் நி. சிந்துஜன்

21 வயதின் கீழ் ஆண் கோட்டமட்ட முதன்மைவீரர் யோ .ஸ்ரீராம்நாத்

19 வயதின் கீழ் ஆண் கரம் வலயமட்டம் -1ம் இடம்

**மனைப்பொருளியல் போட்டிகள்.**

- அறிவுப்போட்டி கோட்டமட்டம் தரம் 11 தனலட்சுமி 3ம் இடம்
- அறிவுப்போட்டி கோட்டமட்டம் தரம் 11 தேவகி 4ம் இடம்
- கோட்டமட்டம் தரம் 12 ச.கோமதி 1ம் இடம்.
- கோட்டமட்டம் தரம் 12 இ.சேனுஜா 2ம் இடம்.
- கோட்டமட்டம் தரம் 13 நா.பிரதீபா 1ம் இடம்.
- கோட்டமட்டம் தரம் 13 சி.பவிதா 2ம் இடம்
- கோட்டமட்டம் சஞ்சிகை ஆக்கம் தரம் 13 1ம் இடம்.
- கோட்டமட்டம் புத்தாக்கம் தரம் 12 ச.கோமதி 1ம் இடம்.
- கோட்டமட்டம் புத்தாக்கம் தரம் 12 ச.பிரசாந்தி 2ம் இடம்.

**நியமனம் பெற்றோர்**

செல்வி.சத்தியவான். சிவலட்சுமி 14.11.2008 முதல் எங்கள் பாடசாலையில் தற்காலிக இணைப்பாக இணைந்து ஆங்கிலபாடம் கற்பிக்கின்றார்.

செல்வி.கேதீஸ்வரி.சுந்தரலிங்கம் 10.02.2009 முதல் எங்கள் பாடசாலையில் நிரந்தரமாக இணைந்து ஆங்கிலபாடம் கற்பிக்கின்றார்.

திருமதி. பொன்மதி. பத்மவரதன் 09.03.2009 முதல் பாடசாலையுடன் இணைந்து நடனபாடம் கற்பிக்கின்றார்.

திரு. கந்தசாமி. மோகனதீபன் 21.04.2009 முதல் பாடசாலையுடன் இணைந்து நாடகமும் அரங்கியலும் கற்பிக்கின்றார்.

செல்வி.மாதினி.அசோகன் 09.07.2009 முதல் ஆங்கில மொழிமூல கணிதபாட ஆசிரியராக முதல் நியமனம் பெற்று இணைந்துள்ளார்.

திருமதி.பிரபாகரி.ஞானகணேசன் 15.09.2009முதல் மீண்டும் கல்லூரியுடன் இணைந்து தனது கடமைப் பொறுப்பை பெற்றுள்ளார்.

**ஆசிரியர் இடமாற்றம்**

எங்கள் கல்லூரியில் ஆங்கில மொழிமூலமான கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர் திரு.ப.பரணிதரன் அவர்கள் 10.12.2009 முதல் கல்வியலாளர் சேவை ஆற்றுவதற்குப் பதவி உயர்வு பெற்றுச்சென்றுள்ளார்.

கல்லூரியின் நடன ஆசிரியை திருமதி.கவிதா.குமாரகுலசிங்கம் அவர்கள் வெளிநாடு சென்றுள்ளார்.

திருமதி. நந்தினி. தனரஞ்சன் அவர்கள் விஞ்ஞான ஆசிரியையாகக் கடமையாற்றி 27.04.2009 முதல் இடமாற்றம் பெற்று நவாலி மகாவித்தியாலயத்திற்கு சென்றுள்ளார்.

தற்காலிக இணைப்பாக இணைந்துள்ள விஞ்ஞான பாட ஆசிரியை செல்வி.ராஜி.இராசநாயகம் அவர்கள் 12.06.2009 முதல் தற்கால இணைப்பாக யா/கோப்பாய் மகாவித்தியாலத்திற்குச் சென்றுள்ளார்.

தற்காலிக இணைப்பாக இணைந்துள்ள விஞ்ஞான பாட ஆசிரியை திருமதி. அஜந்தா. ஆனந்தசொரூபன் 15.07.2009 முதல் யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்திற்குத் தற்காலிக இணைப்பாகச் சென்றுள்ளார்.

திரு. யேசுதாசன். தேவானந் அவர்கள் தற்காலிக இணைப்பாக எங்கள் பாடசாலையில் சித்திர ஆசிரியராகக் கடமையாற்றி 07.09.2009 முதல் தற்காலிக இனணப்பாக மன்/அல் அஸ்ஹர் மகாவித்தியாலயத்திற்கு மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்

## ஓய்வு பெறுவோர்

திருமதி. மோ. கஜமுகவரதன் கல்லூரியில் சித்திரபாட ஆசிரியராகக் கடமையாற்றி 10.04.2009 முதல் ஓய்வு பெற்றுச்சென்றுள்ளார்.

# எமது தேவைகள்

இன்றைய விழாவின் விருந்தினர்களே! பெற்றோர்களே! கல்வித்திணைக்கள அதிகாரிகளே! நலன் விரும்பிகளே! எங்கள் தேவைகளை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

எங்கள் தேவைகளைத் தாங்கள் கேட்காமலே நிறைவு செய்து தருவீர்கள் என்பதை நாமறிவோம். எனினும் தங்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய கடமை எனக்குண்டு.

## ஆரம்பபிரிவு

கல்லூரியின் ஆரம்பப் பாடசாலை தனியொரு பிரிவாக அரை மைல் தொலைவில் இயங்கி வருகின்றது. இங்கு கல்விகற்கின்ற மாணவர்களில் அதிகமானோர் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்கள். இவர்களின் அடிப்படைத் தேவைகள் சில இன்னும் பூர்த்தி செய்யப்படாமலே உள்ளது. ஆரம்பப்பிரிவின் தேவைகள் சில பின்வருமாறு

1. புதிய திட்டத்தின் கீழ் தரம் 1-5 வரையுள்ள வகுப்புக்களிற்குக் கற்பித்தல் செயற்பாட்டிற் கேற்ப செயற்பாட்டறையுடன் கூடிய மூடிய வகுப்பறை இல்லை. எனவே அவ்வசதியைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

2. மாணவர்கள் விளையாட்டுத் துறையில் துறையில் ஈடுபட மைதான வசதி இல்லை. விளையாட்டுப் பயிற்சியையோ, போட்டியையோ அங்கு நடாத்த முடியாதுள்ளது. எனவே ஒரு விளையாட்டு மைதானம் அமைப்பதற்குத் தங்கள் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்.

**கல்லூரி மட்டம்**

கல்லூரியில் பெருவிழாக்கள் நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்ற மண்டபம் ஒன்று இல்லாமை ஒரு பெரும் குறையாக உள்ளது.இத்தேவையை எங்களுக்கு நிறைவு செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் தங்களிடம் இதனை சமர்ப்பிக்கின்றேன்.

கல்லூரியில் பொதுவிஞ்ஞான ஆய்வுகூடம்,நூலகம் என்பன தனித்தனி வசதிகளுடன் கூடியதாக அமையவில்லை.எனவே இவற்றைச் சிறந்த முறையில் ஆவன செய்ய உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கல்லூரியின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு விளையாட்டுச் செயற்பாட்டறை, சிறந்த விளையாட்டுமைதானம் விளையாட்டு உபகரணங்கள் இல்லாமை போன்றன பெரும் தடையாக உள்ளது. எனவே இத்தேவையையும் பூர்த்தி செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கல்லூரியின் கிழக்கு மண்டபம் மிகவும் பழமையான நிலையில் பயன்பாட்டுக் கேற்றதாக இல்லாத போதிலும் மாணவர்களுக்கு அவ்வகுப்பறை களிலேயே வகுப்புக்கள் நடைபெறுகின்றன. எனவே இம்மண்டபத்தை புதிதாக அமைக்க உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மற்றும் தற்காலிகக் கொட்டகைகளில் தான் பல வகுப்புக்கள் நடைபெறுகின்றன. வகுப்பறை பற்றாக்குறையே இதற்குக்காரணமாகும். அவ்வகுப்பறைகள் மழை நேரங்களில் பாவனைக்குப் பெரும் சிரமத்தை உண்டாக்கும் நிலையில் உள்ளன. எனவே இவைகளைக் கருத்தில் கொண்டு உதவுமாறு தங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

## இவ்வாண்டு கல்லூரிக்குக் கிடைக்கப்பெற்றவை

1) இவ்வாண்டும் பரிசளிப்பு விழாவிற்காக வருடா வருடம் நிதியை வழங்கும் திருவாளர் S.பாலசிங்கம் அவர்கள்.அவர்களின் மனைவி திருமதி. பாலசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களது மகன் பா.இளங்கோ அவர்களால் ரூபா 17,500. வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி தரம் 6 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரையுள்ள திறமையான பெறுபேறு பெற்ற மாணவர்களுக்குத் தலா 1000 ரூபா பரிசு கொடுக்கப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

2) ஆரம்பபிரிவு பாடசாலை மதில் அமைப்பதற்காக நிதியுதவியை வழங்கியோர்

| | | |
|---|---|---|
| 1. | Dr.S. பசுபதிராஜா | 50,000.00 |
| 2. | திருமதி. வசந்தா. தனபாலசிங்கம் | 20,000.00 |
| 3. | திருமதி. ஜெயலக்சுமி. ராஜரட்ணம் | 10,000.00 |
| 4. | திரு. ராஜரட்ணம். சேந்தன் | 10,000.00 |
| 5. | திருமதி. கமலா. குணரட்ணம் | 10,000.00 |
| 6. | திருமதி. கமலா. தர்மலிங்கம் | 5,000.00 |
| 7. | Dr.T. பரந்தாமன் | 10,000.00 |
| 8. | திருமதி. P. கணபதிப்பிள்ளை | 5,000.00 |
| 9. | திருமதி. சாந்தினி. சிறீகாந்தா | 5,000.00 |
| 10. | திரு. K. சிவகுமார் | 5,000.00 |

மதில் கட்டுவதற்கான மொத்த நிதியாக ரூபா 130,000.00 கிடைக்கப்பெற்றுள்ளது.

மேற்குறிப்பிட்டவை உட்பட 2009ம் ஆண்டு பாடசாலைக்கு நிதியுதவி வழங்கியோர்.

**யா/வட்டு இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு 2009 இல் அன்பளிப்பு வழங்கியோர் (ஆரம்ப பிரிவுக்கு நிதி வழங்கியோர் உட்பட)**

| பெயர் விபரங்கள் | தொகை |
|---|---|
| • தொண்டுபடு நிகழ்வு (பெற்றோர்கள்) | 23,000.00 |
| • திரு. த. தயாபரன் (விளையாட்டுப் போட்டி) | 3,000.00 |
| • செல்வி. த. சிவானந்தம் (விளையாட்டுப் போட்டி) | 2,300.00 |
| • திரு. S. பிரதீப் (விளையாட்டுப்போட்டி) | 2,500.00 |
| • திரு. பொ. காங்கேயநாதன் (விளையாட்டு போட்டி) | 5,000.00 |
| • திருமதி. த. சதீஸ்குமார் ஆசிரியர்(பௌதீகவியல் ஆய்வுகூடம்) | 5,000.00 |
| • திரு. S. நாகராசா | 7,000.00 |
| • தொண்டுபடு நிகழ்வு (ரட்ணம் பவுண்டேசன்) | 40,118.00 |

**ஆரம்பபிரிவு மதில்கட்டுவதற்கான அன்பளிப்பு வழங்கியவர்கள்**

| | |
|---|---|
| • திரு.S.இராசதுரை(வட்டுகிழக்கு-வட்டுக்கோட்டை) | 1,000.00 |
| • திரு.மு.இராசலிங்கம்(வட்டுகிழக்கு-வட்டுக்கோட்டை) | 1,000.00 |
| • திரு.S.இராமநாதன்(வட்டுகிழக்கு-வட்டுக்கோட்டை) | 1,000.00 |
| • திரு.C.M.இராசேந்திரம் | 1000.00 |
| • செல்வி.க.கௌரிதேவி | 2000.00 |
| • திரு.M.இராசதுரை | 5000.00 |
| • திருமதி.S.கேசினி | 5000.00 |
| • Dr.S.பசுபதிப்பிள்ளை | 50000.00 |
| • திருமதி.வ.தனபாலசிங்கம் | 20000.00 |
| • திருமதி.ஜெ.இராஜரட்ணம் | 10000.00 |
| • திரு.செந்தூரன் | 10000.00 |
| • திருமதி.க.குணரட்ணம் | 10000.00 |
| • திருமதி.க.தர்மலிங்கம் | 5000.00 |
| • Dr.த.பரமநாதன் | 10000.00 |
| • திருமதி.S.கணபதிப்பிள்ளை | 5000.00 |
| • திருமதி.க.ஸ்ரீகாந்த | 5000.00 |
| • திரு.K.சிவகுமார் | 5000.00 |
| • திருமதி.வதனி.சேந்தன் | 5000.00 |
| • செல்வி.பூ.சத்தியபாமா | 5000.00 |
| • திருமதி.விஜயா | 1000.00 |
| • திரு.க.விவேகானந்தன் | 5000.00 |
| • முத்தமிழ் விழா மன்றம் | 96743.00 |
| • Dr.பா.இளங்கோ | 17500.00 |
| • Ratnam Foundation | 100000.00 |
| • Dr.S.இராமநாதன் | 30000.00 |
| • Dr.சுமந்திரன் | 10000.00 |
| 2009 இல் பெற்ற மொத்த அன்பளிப்பக்கள் | 504161.40 |
| 2008 இல் பெற்ற மொத்த அன்பளிப்புக்கள் | 235500.00 |
| 2009 இல் பெற்ற மொத்த அன்பளிப்புக்கள் | 504161.40 |
| **மொத்தம்** | **739661.40** |

| | |
|---|---|
| கல்வித்திணைக்களம் ஆரம்பப்பிரிவு மலசலகூடம் திருத்தம் | 44040.55 |
| கல்வித்திணைக்களம் மனையியல் கூடதிருத்த பிடிபணம் பெற்றது | 19039.14 |
| **மொத்தம்** | **63079.69** |

# நன்றி நவிலல்

ஒரு நூற்றாண்டுக்கு மேல் பழம் பெருமை வாய்ந்த கல்லூரியின் ஸ்தாபகர் அம்பலவாணநாவலர் அவர்களையும், கல்லூரிக்காகத் தம்மை அர்ப்பணம் செய்து சேவை புரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகஸ்தர்கள் அனைவரையும் இன்றைய நன்நாளில் கல்லூரிச்சமூகம் சார்பில் நினைவு கூருகின்றேன்.

அடுத்து இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்து சிறப்பித்த பேராசிரியர். மா. சின்னத்தம்பி அவர்களுக்கும்,அவர்தம் பாரியார் அவர்களுக்கும் ஆசியுரை நல்கிய ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.சு.கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், சிறப்பு விருந்தினர் வலிகாம வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி. ச. சிவசக்திதேவி அவர்களுக்கும், கௌரவ விருந்தினராக வருகை தந்து சிறப்பித்த சங்கானைக் கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் துரை. எங்கரசு அவர்களுக்கும், ஓய்வு பெற்ற பொறியியலாளர் திரு.பொ.சண்முகானந்தசிவம் அவர்களுக்கும்.

நிறுவுநர் நினைவு பேருரை ஆற்றிய சிவஸ்ரீ. சபா வாசுதேவக்குருக்கள் அவர்கள் மற்றும் இங்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் முதலில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்கள் கல்லூரியின் நிர்வாகச்செயற்பாடுகள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், ஏனைய புறநிலைச்செயற்பாடுகள், சிறப்பாக நடைபெறச் சிறந்த ஒத்துழைப்பு நல்கும் ஆசிரியப் பெருந்தகைகளிற்கும், உபஅதிபர், பகுதித் தலைவர்கள், நிர்வாக உதவியாளராக விளங்கும் எழுதுவினைஞர், சிறப்புறச் செயற்படும் கல்விசாரா ஊழியர்கள் அனைவரிற்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தரம் 6, 7, 8, 9, 10, 11இலும், க.பொ.த உயர்தர வகுப்பிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற தொடர் கணிப்பீட்டுமுறை, செயற்திட்டங்களுக்குப் பொறுப்பாக உள்ள ஆசிர்யர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.அத்துடன் விடுமுறை நாட்களிலும், ஏனைய நாட்களிலும்,மாலை நேரங்களில் மேலதிக வகுப்புக்களை நடாத்தும் ஆசிரியர்களிற்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

க.பொ.த சாதாரணதர பரீட்சை 2008 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சை 2008 ஆம் ஆண்டு ஆகிய பரீட்சைப் பெறுபேறுகள் திருப்திகரமாக அமைவதற்குச்சிறந்த வழிகாட்டிகளாக இருந்த ஆசிரியர்களிற்கும்,கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்த மாணவர்களிற்கும்,எனது நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் புறநிலைச்செயற்பாடுகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், பயிற்றுவிக்கும் ஆசிரியர்களிற்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்லூரியில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் சிறப்பாக அமைய அடிக்கடி வருகை தரும் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.துரை.எங்கரசுஅவர்களிற்கும்,எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவரைத் தொடர்ந்து ஆலோசனை கூறும் வலயக் கல்விப்பணிப்பாளர் உதவிக்கல்விப்பணிப்பாளர்கள்,ஆசிரிய ஆலோசகர்கள்,கோட்டக்கல்வி அலுவலக ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் கல்லூரியின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச்செய்த அரசாங்க அமைப்புக்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரது பங்களிப்பால் தான் எம் மாணவர்கள் முழுமையான பயனை அடைய முடிகின்றது. அவ்வாறான பெருமைக்கு உரியவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்து கல்லூரி சார்பாகவும்,கல்லூரிச்சமூகம் சார்பாகவும் நன்றி கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் சங்க உறுப்பினர்கள் யாவருக்கும் இவ்விடத்தில் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

Dr Ratnam foundation நிதியாகக் கல்லூரியின் பழைய மாணவன் திருவாளர்.இ.நித்தியானந்தன் அவர்கள் மாணவர்களுக்கான பரிசு நூல்கள் வாங்குவதற்காக முழுப்பொறுப்பையும் ஏற்று ரூபா 1லட்சத்தினை அள்ளி வழங்கியுள்ளார்.அவர்களுக்குக் கல்லூரியின் சார்பில் மனமுவந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.அத்துடன் 2008ம் ஆண்டு கோட்டமட்டத்தில் நடைபெற்ற தொண்டுபடு போட்டி நிகழ்வுக்கான பரிசில்களை வாங்குவதற்காக ரூபா40,118.40 இனை வழங்கியுள்ளார்.அதற்காக மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாண்டு பரிசளிப்பு விழாவிற்காக வருடாவருடம் நிதியை வழங்கும் திருவாளர். S.பாலசிங்கம் அவர்களின் மகன் பா.இளங்கோ அவர்களால் ரூபா17,500 வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக கொள்கின்றேன்.

வருடா வருடம் பரிசளிப்பு விழாவிற்காக நிதியை மனமுவந்து வழங்கும் கல்லூரியின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி கா.சுமந்திரன் அவர்கள் இம்முறையும் ரூபா10,000 வழங்கியுள்ளார். அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கல்லூரியின் ஆரம்பபிரிவிற்கு மதில் அமைப்பதற்கு உதவி புரிந்த Dr.பசுபதிராஜாஅவர்கள்,திருமதி.வசந்தா.தனபாலசிங்கம்அவர்கள்,திருமதி.ஜெயலக்சுமி .ராஜரட்ணம்அவர்கள்,திரு.ராஜரட்ணம்.சேந்தன்அவர்கள், திருமதி. கமலா. குணரட்ணம் அவர்கள்,திருமதி.கமலா.தர்மலிங்கம்அவர்கள்,Dr.T.பரந்தாமன்அவர்கள்,திருமதி.P.கண பதிப்பிள்ளைஅவர்கள், திருமதி. சாந்தினி. சிறீகாந்தா அவர்கள், திரு.K.சிவகுமார் அவர்கள், ஆகியோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்லூரியின் ஆரம்பப் பிரிவிற்கு மதில் அமைப்பதற்கு ,பெருந்தொகைப் பணத்தை திரட்டித்தந்தும்,வேறுதேவைகளிற்கு நிதியுதவியினையும் பல்வேறு உதவிகளையும் வழங்கும ஓய்வுபெற்ற பொறியியலாளர் தம்பிராஜா.பாலேந்திரன் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இவ்வாண்டு ஆரம்பபிரிவிற்கு மதில் அமைப்பதற்கு நிதி உதவிய ஏனையவர்களுக்கும் தொண்டுபடு நிகழ்வுக்கு நிதியுதவியை வழங்கியோருக்கும் மற்றும் ஏனைய தேவைகளுக்கும் நிதியதவியை வழங்கியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இன்றைய விழாவிற்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் கல்லூரியின் வளர்ச்சியிலும் நலனிலும் அக்கறை கொண்டு அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்ற உதவிபுரிகின்ற ஆலோசனை வழங்குகின்ற அனைத்து அன்புள்ளங்களிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொண்டு விடை பெறுகின்றேன்.

நன்றி

வணக்கம்

# கல்லூரிக் கீதம்

வாரும் வாரும் யாரும் தோழர்கள்
மனது குளிர வாழ்த்துவோம்
எங்கள் அன்புடைத் தாயின் சீரிய
இன்பக் கல்லூரி வாழ்கவே
இறைவன் சேவடி யாவரும் பாடுமின்
ஏத்தி ஏத்தி வாழ்த்துவோமே. (வாரும் வாரும்)

மங்களம் திகழ் வட்டு மாநகர்
வாழச் செந்தமிழ் ஆங்கிலம்
வாழச் சைவம் வாழ வந்திடு
வாணி வாழ் கல்லூரியை. (வாரும் வாரும்)

சைவம் வாழத் தெய்வம் வாழ
தமிழும் வாழ ஆங்கிலம்
தழைத்து வாழத் கிளைத்து மாணவர்
தழைத்து வாழ வாழ்த்துவோம். (வாரும் வாரும்)

RATNAM FOUNDATION
U.K.
RATNAM MASTER
20........
MEMORIAL PRIZE

திருமொழி அச்சகம், சங்கானை.